பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும் ... (யூதா 3).


# பெந்தெகொஸ்தின் பேரொலி

பெந்தெகொஸ்தே சபையின் மாத இதழ் விலை ரூ 5/-

இம்மாத இதழை வாசித்து இயேசுவைப் போல் மாற வாஞ்சியுங்கள்!

மணி 50 மார்ச் 2022 ஒலி 6


## தேவபக்தி
## (பகுதி II)

மெய்யான தேவபக்தியின் சில அம்சங்களைச் சென்ற இதழில் நாம் ஆராய்ந்தோம். தேவ ஜனங்கள் என்று அழைக்கப்படுகிறவர்களுங் கூடத் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கும் இக்கடைசி நாட்களில், நாம் மெய்யான தேவபக்தியுள்ள ஜீவியம் செய்து, ஆண்டவராகிய இயேசுவின் இரகசிய வருகைக்கு நம்மை நாமே ஆயத்தமாக்கிக்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் தேவபக்தியைக் குறித்து மற்றும் சில கருத்துக்களை இவ்விதழில் நாம் ஆராய்வோமாக! **வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள - 'பயபக்தி', 'பக்திவிருத்தி', 'பக்திவைராக்கியம்' ஆகிய பதங்கள் தேவபக்தியோடு சம்பந்தப் பட்டவையாயிருக்கின்றன.**

**பயபக்தி:**

தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் அதிகமதிகமாய்ப் பயந்து நடுங்கி, அவரையும் அவருடைய சமுகத்தையும் கனம்பண்ணுவதே 'பயபக்தி' ஆகும். *"கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்"* (சங். 22 : 23) என்று கூறி, தாவீது, தன் ஜனங்களைத் தேவன்பேரில் பயபக்தியாயிருக்கும்படி ஏவி எழுப்புகிறான். இஸ்ரவேலர் கைக்கொள்ளும்படியான பிரமாணங்களைத் தேவன் மோசேயின் மூலம் அவர்களுக்குக் கொடுத்தபோது, *"என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்"* (லேவி. 26 : 2) என்று சொன்னார். சிலர் தேவசமுகத்தில் அசதிக்கும், நிர்விசாரத்திற்கும், நித்திரை மயக்கத்திற்கும், வீண் சிந்தனைகளுக்கும், பலவிதமான கவலைகளுக்கும் இடமளித்து, தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தி அற்றவர்களாக, அவரது சமுகத்தை அசட்டை பண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள். இவை யாவும் அவர்கள் தேவபக்தியற்றவர்களாயிருந்து தேவனைக் கனவீனப்படுத்துவதையே காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில் ஜீவித்த தாவீது ஒரு ராஜாவாயிருந்த போதிலும், *"நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்"* (சங். 5 : 7) என்று கூறுகிறான். தேவசமுகத்தில் தேவபயத்துடன் முழங்காற்படியிட்டு நன்றி செலுத்தி ஜெபிப்பது பயபக்தியின் ஒரு அறிகுறியாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கெத்செமனே தோட்டத்தில் முழங்காற்படியிட்டுத் தம் பிதாவை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தார்; அவருக்கு உண்டாயிருந்த பயபக்தியினிமித்தம் அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது என்று கூறப்பட்டிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம் (லூக்கா 22 : 41, 42 ; எபி. 5 : 7). முழங்கால் ஜெபத்தை நம் ஜீவியத்தில் நாம் காத்துக்கொள்வோமாக! தேவன் மேல் பயபக்தியாயிருக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் அவர் பலனளிக்கிறவராயிருக்கிறார் (வெளி. 11 : 18).

**பக்திவிருத்தியடைதல்:**

நாளுக்குநாள் நாம் தேவபக்தியில் விருத்தியடைய வேண்டும். அதாவது நாம் தேவபக்தியில் வளர்ச்சியடைய வேண்டும். *"அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்"* (I கொரி. 8 : 1) என்று அப். பவுல் கூறுகிறார். "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று

எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறிய வில்லை" (வச. 2) என்றும் அதைத் தொடர்ந்து அவர் கூறுகிறார். எனவே, நமக்கு எல்லாம் தெரியும் என்ற இறுமாப்பான எண்ணத்தை விட்டுவிட்டு, நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும்; மேலும், "*அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்*" என்று கூறப்பட்டி ருக்கிறது. பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம் இருதயத்தில் ஊற்றப்பட்டிருப்பதால், எப் போதும் பரிசுத்த ஆவியின் நிறைவில் ஜீவித்து, தேவ அன்பில் பெருகுவதின் மூலம், நாம் பக்தி விருத்தி அடைவோமாக!

'*அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளை நாடக்கடவோம்*'; "*நம்மில் ஒவ்வொரு வனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மை யுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன்*" (ரோமர் 14 : 19 ; 15 : 2) என்று நாம் வாசிக் கிறோம். நம் வார்த்தைகள், கிரியைகள், நடக்கை யாவும் மற்றவர்களுக்குப் பக்திவிருத்தி உண்டாக்கு பவையாக இருக்க வேண்டும்; எவ்விதத்திலும் நம் நிமித்தம் மற்றவர்கள் இடறிப்போகக் கூடாது என்பது குறித்து நாம் கவனமாயிருக்க வேண்டும் (I கொரி. 10 : 32, 33 ; பிலி. 1 : 11). மேலும், நாம் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷைகளைப் பேசும்போது நமக்குள் பக்திவிருத்தி உண்டாகிறது; தீர்க்கதரிசன வரத்தை உபயோகிக்கும்போது மற்ற வர்கள் நம் மூலம் பக்திவிருத்தி அடைகிறார்கள் (I கொரி. 14 : 4). "*நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங் கள்*" (வச. 12) என்று அப். பவுல் கூறுகிறார். எல்லா மனத்தாழ்மையோடும் கர்த்தருக்குள் மறைந்திருந்து ஆவிக்குரிய வரங்களை நாம் பிரயோஜனப்படுத்து வோமாக! *நாம் ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக் கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்வோ மாக* (I தெச. 5 : 11). "*சகலத்தையும் உங்கள் பக்தி விருத்திக்காகச் செய்கிறோம்*" (II கொரி. 12 : 19) என்று அப். பவுல் கூறுவது போன்று, நாம் எதைச் செய் தாலும், அதை மற்றவர்களுடைய பக்திவிருத்திக் காகச் செய்வோமாக!

**பக்திவைராக்கியம்:**

நாம் நாளுக்குநாள் பக்தியில் விருத்தி யடைந்து, *பக்திவைராக்கியமுள்ளவர்களாய்* மாற வேண்டும்! பாவத்திற்கு எவ்வித இரக்கமும் காண் பியாமல் அதை முற்றிலுமாய் அழித்துப்போடு வதும், மனுஷரைப் பிரியப்படுத்தாமல், முற்றிலு மாய்த் தேவனுடைய பட்சத்தில் நின்று, அவருடைய மனதை விளங்கிக்கொண்டவர்களாக, அவருக்குப் பிரியமில்லாத சுபாவங்களையும் கிரியைகளையும் அழித்துப்போடுவதும் பக்திவைராக்கியத்தின் ஒரு அம்சமாகும்.

இஸ்ரவேலர் பாவஞ்செய்ததினிமித்தம் கர்த்தருடைய கோபம் முழுச் சபையின் மேலும் உண்டானபோது அவர்கள் நடுவில் *பினெகாஸ்* எழுந்துநின்று, வேசித்தனம் செய்த இருவரை உருவக் குத்திப்போட்டு, இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான கர்த்தருடைய உக்கிரத்தைத் திருப்பி னான். "*நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண் பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்*" என்று கர்த்தர் சொன்னார் (எண். 25 : 1 - 13). நம்முடைய தனிப்பட்ட ஜீவியத் தில் இது பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத் தக்கதாக எதிர்த்து நிற்பதைக் காண்பிக்கிறது (எபி. 12 : 4). இஸ்ரவேலர் ஜீவனுள்ள தேவனை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பின்பற்றி விக்கிரகங்களைச் சேவித்தது, அவர்க ளுக்கு வேசித்தனமாகக் கணக்கிடப்பட்டது (ஓசியா 4 : 12, 13 ; எசே. 23 : 30). எந்த நபரையாயினும், எந்தப் பொருளையாயினும் கர்த்தரைப் பார்க்கிலும் அதிகமாக நாம் நேசிப்போமாயின், அது அவரால் வேசித்தனத்தின் ஆவியாக எண்ணப்படும். "விபசா ரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகை யால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்பு கிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேத வாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக் கிறீர்களா?" (யாக். 4 : 4, 5) என்று அப். யாக்கோபு கூறுகிறார். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையுள்ளவராயிருப் பது போன்று, நாமும் நம் ஆத்தும நேசராகிய இயேசுவை நேசவைராக்கியத்துடன் நேசிப்போமாக. "*நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரை யைப்போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப் போலவும் வைத்துக்கொள்ளும்; நேசம் மரணத்தைப் போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது*" (உன். 8 : 6) என்று சூலமித்தியாள் கூறுவது போன்ற

நேசவைராக்கியத்துடன் அவரை மாத்திரம் நாம் உத்தமமான இருதயத்துடன் நேசித்துப் பின்பற்றுவோமாக!

எலியா, "*ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்*" (I இராஜா. 18 : 36) என்று ஜெபித்தான். அவன் தன்னைக் குறித்து, "*சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்*" (I இராஜா. 19 : 10) என்று கூறுகிறான். அவன் கருத்தாய், ஊக்கமாய் ஜெபிக்கிற ஒரு தேவமனுஷனாயிருந்தபடியால், "*இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்*" (I இராஜா. 17 : 1) என்று தைரியமாய்க் கூறக்கூடியவனாயிருந்தான். தேவனாகிய கர்த்தர் மாத்திரமே தேவன், தான் அவருடைய ஊழியக்காரன் என்ற நிச்சயம் அவனுக்கு இருந்தது. அவனுக்கு இருந்த பக்திவைராக்கியத்தினால், செப்பனிடப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தின் மீது கர்த்தருடைய அக்கினி இறங்கியது; பாகாலின் தீர்க்கதரிசிகளை அவன் கொன்றுபோட்டான் (I இராஜா. 18 : 40). நாமும் எப்போதும் தேவசமுகத்தில் ஜீவித்து, நம்முடைய ஜெபஜீவியத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டு, அந்நிய வல்லமைகளைப் பக்திவைராக்கியத்துடன் அழித்துப்போடுவோமாக!

கர்த்தரால் இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட யெகூ, யோனதாபிடம், "*கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்திவைராக்கியத்தைப் பார்*" (II இராஜா. 10 : 16) என்று கூறினான். அவன் கர்த்தருடைய மனதிலிருந்ததையெல்லாம் செய்து நிறைவேற்றினதினிமித்தம் அவர் அவனிடம், "*என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச் செய்து, என் இருதயத்தில் இருந்தபடியெல்லாம் ஆகாபின் குடும்பத்துக்குச் செய்தபடியினால், உன் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள்*" (வச. 30) என்று கூறியதை நாம் அறிந்திருக்கிறோமே! கர்த்தருடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்தப்பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு அவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே ஆகாபின் குடும்பத்தை முற்றிலும் அழித்துப்போட்டான் (II இராஜா. 9 : 7 ; 10 : 9 - 11). நம்மைப் பொறுத்த வரை கர்த்தருடைய ஊழியக்காரரை நாம் துக்கப்படுத்துவோமாயின், அது இரத்தப்பழியாக நம் மீது சுமரும். மேலும், யேசபேல் குற்றமில்லாத நாபோத்தின் இரத்தம் சிந்தப் படக் காரணமாயிருந்தாள் (I இராஜா. 21 : 8 - 11). இவ்விதமான ஆவிகளுக்குத் தேவஜனங்களாகிய நாம் நம்மில் இடம் கொடுக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை கர்த்தருக்கு அருவருப்பானது (நீதி. 6 : 16, 17). எழுத்தின்படியே நாம் இரத்தம் சிந்தாவிட்டாலும், பிறருடைய மனம் புண்படத் தக்கதாகப் பிறரைப் பிழையாக நியாயந்தீர்ப்போமாயின், நாம் குற்றமற்ற இரத்தத்தைச் சிந்துகிறவர்களாயிருப்போம். அத்துடன், யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லிசூனியங்களும் ஏராளமாயிருந்தன (II இராஜா. 9 : 22). இரண்டகம் பண்ணுதல், பில்லிசூனிய பாவத்திற்குச் சரியாய் இருக்கிறது (I சாமு. 15 : 23). அன்றியும், நம்மை நாமே புறம்பாக அலங்கரித்துக்கொள்கிற ஆவியுங் கூட யேசபேலின் ஆவியே (II இராஜா. 9 : 30). யேசபேல் சில பிரதானிகளால் (eunuchs), அதாவது அண்ணகர்களால் கீழே தள்ளப்பட்டு, மரித்தாள். யெகூ, 'அவளை மிதித்துக்கொண்டு உள்ளே போனான்' என்று நாம் வாசிக்கிறோம் (வச. 33, 34). கர்த்தர் மேலுள்ள பக்திவைராக்கியத்தினால் நிறைந்து, அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியர்களுடைய ஊழியங்களின் உதவியினால், நமக்குள் கிரியை செய்யும் இவ்விதமான ஆவிகளை நாம் நம் கால்களின் கீழே மிதிப்போமாக! அவற்றை நாம் அறவே அழித்துப்போடுவோமாக!

"*உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது*" (சங். 69 : 9) என்ற திருவசனத்தின்படியே, கர்த்தராகிய இயேசு பக்திவைராக்கியத்தினால் தேவாலயத்தைச் சுத்திகரித்தார் (யோவான் 2 : 14 - 17). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நாம் தேவனுடைய ஆலயமாய் மாற்றப்பட்டிருக்கிறோம். தேவனுடைய ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் (I கொரி. 3 : 16). நாம் தேவனுடைய வீடாயிருக்கிறோம். நம் ஜீவியம் கள்ளர் குகையாக, வியாபார ஸ்தலமாக மாறக் கூடாது. சாலொமோனின் ஆலயத்தைக் குறித்துத் தேவன், "*இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்துகொண்டேன்*" (II நாளா. 7 : 12) என்று கூறினார். ஆவிக்குரிய பலிகள் செலுத்தும் ஆலயமாக நாம் விளங்குவதற்குப் பதிலாக, கர்த்தராகிய இயேசுவின் நாட்களில் தேவாலயத்திலே பலிப்பொருட்களை மற்றவர்களுக்கு வியாபாரம் செய்தவர்களைப் போல நாம் இருக்கக் கூடாது. நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இஸ்ரவேலர் பலிப்பொருட்களைத் தூரமான இடங்களிலிருந்து எருசலேமிலுள்ள ஆலயத்திற்குக் கொண்டுவருவது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தால், அவர்கள் பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டுபோய், ஆடு மாடு முதலானவைகளை விலைக்கு வாங்கி, பலி செலுத்தலாம் என்ற ஒரு பிரமாணம் அவர்களுக்கு இருந்தது உபா. 14 : 22 - 26). ஆனால் ஆலயத்தில் அவை வியாபாரம் செய்யப்படக் கூடாது. தேவாலயத்தின் தலைவர்களும் பிரதான ஆசாரியர்களும் தங்களுக்கு ஆதாயம் உண்டாகும்படி, வியாபாரம் செய்கிறவர்களுக்கு ஆலயத்தில் இடம் கொடுத்திருந்தார்கள். எனவே தான் ஆண்டவராகிய இயேசு வைராக்கியத்துடன் தேவாலயத்தைச் சுத்திகரித்தார். கர்த்தருடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெப வீடு என்னப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜெபிக்க வேண்டிய நேரத்தில், கர்த்தரை ஆராதிக்க வேண்டிய நேரத்தில் - அநித்தியமான ஆதாயங்களைச் சம்பாதிக்கும் தொழில்களில் நாம் அலுவலாயிருக்கக் கூடாது. அந்த விஷயத்தில் நாம் பக்திவைராக்கியமுள்ளவர்களாய் இருப்போமாக. இல்லாவிட்டால், கர்த்தர் நம்மைப் பார்த்து, "என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர்குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன்" (எரே. 7 : 11) என்று கூறி, நம்மைக் குறித்துத் துக்கப்படுவதற்கு அது ஏதுவாகும்!

மேலும், '*நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாக நம்மைச் சுத்திகரிக்கும்படி, ஆண்டவராகிய இயேசு, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்*' (தீத்து 2 : 14) என்று அப். பவுல் கூறுகிறார். 'நற்கிரியைகள் செய்வது' என்பது நாம் பிறருக்கு நம்மால் இயன்ற நன்மைகளைச் செய்வது என்று மட்டும் பொருள்படாது. ஓர் ஆழ்ந்த அர்த்தத்தில், 'நற்கிரியைகள் செய்தல்' என்பது நாம் தேவசித்தம் செய்து நிறைவேற்றுவதை வெளிப்படுத்துகிறது. ஏனெனில், '*சமாதானத்தின் தேவன் நீங்கள் அவருடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகல வித நற்கிரியைகளிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக*' என்று கூறப்பட்டுள்ளதே! (எபி. 13 : 20, 21). அன்றியும், நற்கிரியைகளைச் செய்ய நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும், நற்கிரியைகளைச் செய்யப் பழக வேண்டும் என்றும் அப். பவுல் கூறுகிறார் (தீத்து 3 : 1, 8, 14). எனவே நம் ஜீவியத்தைக் குறித்த தேவசித்தம் இன்னதென்று அறிந்து அதற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். 'ஆண்டவரே! *நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?*' என்று நம் தேவனை நோக்கி உத்தம இருதயத்தோடு நாம் கேட்போமாயின், அதை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். மேலும் நம் அனுதின ஜீவியத்தில் சிறிதும் பெரிதுமான எல்லாவற்றிலும் தேவசித்தத்தை அறிந்து அதன்படியே நாம் செயல்பட வேண்டும். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அறியும்படி நம்முடைய மனது அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும். தேவசித்தத்தை அறிந்து வைராக்கியத்துடன் அதை நிறைவேற்ற நாம் கருத்துள்ளவர்களாயிருப்போமாயின், தேவனும் நம்மைக் குறித்து வைராக்கியமுள்ளவராய், நம்மில் ஆரம்பித்த நற்கிரியையை மகிமையாய் நிறைவேற்றி முடிப்பார்!

**தேவபக்தியின் இரகசியம்:**

"*தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்*" (I தீமோ. 3 : 16) என்று அப். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். இங்கு தேவபக்தி என்பது ஒரு இரகசியம் என்று அழைக்கப்படுகிறது.

"*தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்*": ஆண்டவராகிய இயேசு, தேவனுக்குச் சமமானவர். "*அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது*" (கொலோ. 1 : 15, 16). அவர் பிதாவாகிய தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானவர் (எபி. 1 : 3). எனினும் அவர் ஒரு ஸ்திரீயின் வித்தாக, பாவ மாம்சத்தின் சாயலாக, விழுந்து போன மனிதவர்க்கத்தின் மீட்புக்காக உலகில் அவதரித்தார். தேவன் மனுஷனானார் என்பது தேவபக்தியின் இரகசியமாகும். அப். பவுல், "*கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்*" (பிலி. 2 : 5 - 8) என்று கூறுகிறார். ஆண்டவராகிய இயேசு தம்மைத் தாழ்த்தி சிலுவையில் நீச மரணத்தை ஏற்றுக் கொண்டார். தேவபக்தியின் இரகசியம், மனத்தாழ்மையிலேயே தங்கியிருக்கிறது என்பதை அநேகர்

அறியாதவர்களாய் இருக்கிறார்கள். எவ்வளவதிகமாய் நாம் மனத்தாழ்மையுள்ளவர்களாய் இருக்கிறோமோ, அவ்வளவதிகமாய் நாம் தேவபக்தியுள்ளவர்களாய் இருப்போம்.

கர்த்தராகிய இயேசு தேவபக்தியின் இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்திக்கிறிஸ்துவிலோ இதற்கு நேர்மாறான அக்கிரமத்தின் இரகசியம் வெளிப்படுகிறது. "அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" (II தெச. 2 : 4). தம்மைத்தாமே தாழ்த்திய ஆண்டவராகிய இயேசு எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார்; சீயோனில் மூலைக்கல்லானார்; பிதாவின் வலதுபாரிசத்தில் அவர் என்றென்றைக்குமாக வீற்றிருக்கிறார்; எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் அவருக்குத் தந்தருளப்பட்டது. ஆனால் அந்திக்கிறிஸ்துவோ தேவபக்தியின் இரகசியத்தை மறுதலித்து, தன்னைத்தானே உயர்த்தி, அக்கிரமத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தி, தன்னுடைய பெருமையினிமித்தம் முடிவில் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டு, நித்திய ஆக்கினைத்தீர்ப்பை அடைவான். தேவனாயிருந்தும் மாம்சத்தில் வெளிப்பட்ட ஆண்டவராகிய இயேசுவின் மனத்தாழ்மையை நாம் தரித்துக்கொள்வோமாக. "*நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்*" (மத். 11 : 29) என்று அவர் கூறினாரே! "*தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்*" (நீதி. 22 : 4). "*உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்*" (மீகா 6 : 8).

"*ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்*": மகா நீதிபரராயிருந்த ஆண்டவராகிய இயேசு, யோவான்ஸ்நானன் மூலம் ஞானஸ்நானம் பெற்று, தேவநீதியை நிறைவேற்றினார். கல்வாரிச் சிலுவையில் கோர மரணமடைந்த அவர், பரிசுத்த ஆவியின் பலத்த சத்துவத்தின் வல்லமையினால் மரித்தோரிலிருந்து எழுந்தார்; பரிசுத்த ஆவியானவராலே அவர் நீதியுள்ளவரென்று நிரூபிக்கப்பட்டார்.

"*தேவ தூதர்களால் காணப்பட்டார்*": முந்தின நித்தியத்தில் தேவதூதர்களின் துதியையும் புகழ்ச்சியையும் பெற்றவராயிருந்த ஆண்டவராகிய இயேசு, அவற்றை விட்டு, இப்பூமியில் பாலகனாக அவதரித்தபோது, தேவதூதர்கள் அவரது பிறப்பை வயல்வெளியிலிருந்த மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 2 : 8 - 15). அவர் நாற்பது நாட்கள் உபவாசமாயிருந்து, வனாந்தரத்தில் காட்டுமிருகங்களின் நடுவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தார்கள் (மாற்கு 1 : 13). அவர் தம்முடைய கல்வாரி மரணத்திற்குச் சற்று முன்னர் கெத்செமனேயில் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்தபோது, வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பெலப்படுத்தினான் (லூக்கா 22 : 43). இவ்விதம் இவ்வுலகில் தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்கிறவர்களாயிருந்ததை நாம் காண்கிறோம்.

"*புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்*": ஆண்டவராகிய இயேசு இவ்வுலகில் இருந்த நாட்களில், "*புறஜாதியாருடைய கலிலேயாவிலே, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது*" என்று அவரைக் குறித்துக் கூறப்பட்டிருந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. அவர், "*மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது*" என்று பிரசங்கித்தார் (ஏசாயா 9 : 1, 2 ; மத். 4 : 14 - 17). சமாரியா ஸ்திரீயிடம் அவர் பேசியதையும், அந்த ஊரில் அநேகர் அவருடைய வசனத்தைக் கேட்டு, அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டதையும் நாம் அறிவோம் (யோவான் 4 : 10, 13, 14, 39 - 42). மேலும், அவர் உயிர்த்தெழுந்து பரமேறுவதற்கு முன்பு, தம் சீஷர்களிடம், '*நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்*' (மத். 28 : 19) என்று கட்டளையிட்டார்.

"*மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்*": பிதாவின் மகிமையினாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசு மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (லூக்கா 24 : 51 ; அப். 1 : 9). உயிர்த்தெழுந்த அவர், '*கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?*' (லூக்கா 24 : 26) என்று, எம்மாவு ஊருக்குச் சென்றுகொண்டிருந்த இருவரிடம் கூறியதின்படியே, மகிமையில் பிரவேசித்தார்!

ஆம்! தேவபக்தியின் இரகசியமானது, மகா மேன்மையுள்ளது. தேவனாயிருந்தும் மனுஷனாக இவ்வுலகில் அவதரித்து, தாழ்மையான, ஏழ்மையான ஜீவியஞ்செய்து, சிலுவையின் மரண

பரியந்தம் தம்மைத் தாழ்த்திய ஆண்டவராகிய இயேசு, எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப் பட்டார்!

**தேவபக்தியில் உறுதி:**

"*கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்*" (II தீமோ. 3 : 12) என்று நாம் அறிந்திருக்கிறோம். தேவபக்தியாய் ஜீவிப்பதின் நிமித்தம் நாம் பலவித பாடுகளின் வழியாகக் கடந்துசெல்ல நேரிட்டாலும், நம் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்துபோகக் கூடாது (ஓசியா 6 : 4); நாம் தேவ பக்தியில் உறுதியாயிருக்க வேண்டும்! (யோபு 4 : 6).

"*அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிற வர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவ னுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபை யைப் பற்றிக்கொள்ளக்கடவோம்*" (எபி. 12 : 28) என்று அப். பவுல் கூறுகிறார். எனவே தேவனுக்குப் பிரிய மாய், பயபக்தியுடன் அவருக்கு ஆராதனை செய் யும்படியாக, அவரைச் சேவிக்கும்படியாக (Eng.) - நாம் கிருபையைப் பற்றிக்கொள்வோமாக! மேலும், "*நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நிய மித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கிய மான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்*" (II கொரி. 11 : 2) என்று அப். பவுல் கூறுகிறார். நம் மேல் அவ்வித பக்திவைராக்கியத்துடன் நமக்காக உத்தர வாதம் பண்ணும்படியாக விழித்திருக்கும் அப் போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியரின் ஐக்கியத் திலும் உபதேசத்திலும் முற்றுமுடிய பக்திவைராக் கியத்துடன் நாம் உறுதியாய் நிலைத்திருந்து, கிறிஸ்து வின் இரகசிய வருகையில் கற்புள்ள கன்னிகை யாக அவருக்கு முன் நிறுத்தப்படுவோமாக!

**தேவபக்தியாய் ஜீவிப்பவர்களுக்குத் தேவன் வைத் திருக்கும் ஆசீர்வாதங்கள் :**

தேவபக்தியுள்ளவர்களின் ஜெபங்களுக்குத் தேவன் பதில் தருகிறார் (யோவான் 9 : 31); மிகுந்த ஜலப்பிரவாகம் போன்ற ஆபத்துகள் வந்தாலும், அவை அவர்களை அணுகாமல் அவர் பாதுகாக் கிறார் (சங். 32 : 6). மேலும், அவர்களுடைய ஆத்து மாக்களை அவர் காத்துக்கொள்கிறார் (சங். 86 : 2).

'*தேவன் தேவபக்தியுள்ளவர்களைச் சோத னையினின்று இரட்சிக்க அறிந்திருக்கிறார்*' என்று II பேதுரு 2 : 9 - இல் நாம் வாசிக்கிறோம். இங்கு, பூமியின் மீது வந்த ஜலப்பிரளயத்தில் அழிந்து போகாமல் நோவாவும் அவன் குடும்பத்தாரும் காக்கப்பட்டதையும், சோதோம் கொமோராவின் மீது வந்த அழிவிலிருந்து லோத்து தப்புவிக்கப் பட்டதையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது (வச. 6 - 9). நோவா காணாதவைகளைக் குறித்துத் தேவ எச் சரிப்புப்பெற்று, *பயபக்தியுள்ளவனாகி*, தன் குடும் பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணி னான் (எபி. 11 : 7). அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தில் ஜீவித்துக்கொண்டிருந்த அவன், பயபக்தி யுள்ளவனாய் இருந்ததினிமித்தம் பூமியின் மேல் வந்த கொடிய ஜலப்பிரவாகத்தில் வாரிக்கொள்ளப் படாதிருந்தான் (II பேதுரு 2 : 5). அவனைப் பற்றி, "*நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதி மானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவ னோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்*" (ஆதி. 6 : 9) என்று கூறப்பட்டுள்ளது. லோத்தைக் குறித்து, அவன் தன்னைச் சுற்றிலும் இருந்த ஜனங்களின் அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டுக்கொண்டிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம் (II பேதுரு 2 : 8).

"*தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற் குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகை யால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது*" (I தீமோ. 4 : 8) என்று நாம் வாசிக்கிறோம். எனவே தேவபக்தி யுள்ள ஜீவியமானது இம்மையிலும் மறுமையிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரித்துக் கொள்வதற்குப் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

'*தேவன் தம் பக்தர்களுக்குத் தரிசனமாகிறார்*' (சங். 89 : 19) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். தேவ பக்தியாய் ஜீவித்த அனனியா, அப். பவுல் போன்ற பரிசுத்தவான்கள் இவ்வுலகில் இருந்தபோது தேவன் அவர்களுக்குத் தரிசனமானதை நாம் அறிவோம் (அப். 9 : 10 ; 22 : 12 ; 18 : 9). நாமும் தேவபக்தியுள்ள வர்களாய் ஜீவித்தால் இம்மையில் நாம் அவரைத் தரிசிப்பதுடன், அவர் மத்திய வானில் தரிசனமாகும் அந்நன்னாளில், அவரைத் தரிசித்து, என்றென்றும் அவரோடிருக்கும்படி அவரிடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவோம்!

**வாக்குத்தத்தம்**

'நான் எருசலேமுக்காகவும் சீயோனுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன். மனஉருக்கத்தோடே எருசலேமினிடத்தில் திரும்பினேன்; என் ஆலயம் அதிலே கட்டப்படும்' (சக. 1 : 14, 16).

# 23-ஆம் சங்கீதத்தின் இனிமை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

# என் மேய்ப்பரும் நானும்

*"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்"*

## அவருடைய ஆடு நான்!

ஆடானது, தன் மேய்ப்பனின் சத்தத்தைக் கேட்டு, அவனைப் பின்பற்றிச் செல்லுகிறது. நீ உன் மேய்ப்பரின் சத்தத்தைக் கேட்டுப் பழகியிருப்பாயாகில், ஒருநாள் எக்காளம் தொனிக்கும்போது, அவர் உன்னை அழைக்கும் சத்தத்தை நீ உன் ஆவியில் பகுத்தறிந்துகொள்வாய். இன்று உன்னுடைய மனச்சாட்சி ஒருவேளை மரித்த நிலையில் அல்லது செயலற்ற நிலையில் இருக்கக் கூடும். நீண்ட நாட்களாக நீ தேவசத்தத்தைக் கேட்காமலேயே இருக்கக் கூடும். கர்த்தர் தன்னோடு பேசக் கூடாதபடிக்கு அவரை விட்டு வெகுதூரம் சென்றுவிட்ட ராஜாவாகிய சவுலைப் போல நீ இருக்க வேண்டாம் (I சாமு. 28 : 6). நீ உன் ஜீவியத்தையும் உள்ளத்தையும் அவருக்குத் திறப்பாயாக! அப்போது அவர் உன்னோடு பேசி, உன் உள்ளத்திலிருக்கும் எல்லாக் குழப்பங்களையும் அகற்றிவிடுவார்.

ஆட்டின் மற்றொரு தன்மை யாதெனில், ஒரு ஓநாயோ அல்லது சிங்கமோ அதை நோக்கி உறுமுமாயின் அல்லது கெர்ச்சிக்குமாயின், அது அந்தச் சத்தம் வருகிற திக்கைப் பார்க்கும்படி அத்திசை நோக்கித் திரும்பாது; மாறாக, அது தன் மேய்ப்பனை நோக்கித் தன் கண்களை ஏறெடுக்கும். அது தன்னால் ஒன்றுமே செய்ய இயலாது என்பதை அறிந்திருக்கிறது; ஆகவே அது உடனடியாகத் தன் மேய்ப்பனை நோக்கிப்பார்க்கிறது. அவ்விதமாகவே நாம் நம் கஷ்ட நேரங்களிலும் ஆபத்தான வேளைகளிலும் - எதிராளியானவன் சிங்கம் போல நமக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கும்போது, நம் மேய்ப்பரையே நோக்கிப்பார்க்க வேண்டுமென்ற உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களிலும் நாம் சூழ்நிலைகளையும், மனுஷரையும் நோக்கிப்பார்த்துப் பயமடைகிறோம். அதன் பின் நாம் விவேகமற்ற காரியங்களைச் செய்ய முற்படுகிறோம் - நம்மை நாமே தப்புவித்துக்கொள்ள முயற்சி செய்கிறோம்; நமக்காக நாம் வழக்காடுகிறோம்; நம்மைத் தற்காத்துக்கொள்ள எத்தனிக்கிறோம்; நம் நியாயங்களை எடுத்துரைத்து நம் நீதியை நிலைநாட்ட முயற்சிக்கிறோம். இவ்வாறு நாம் பல மதியற்ற காரியங்களைச் செய்கிறோம். அருமையானவர்களே, நமக்கு ஒரு நல்ல மேய்ப்பர் இருக்கிறார்; நமக்கு ஒரு பெரிய மேய்ப்பர் இருக்கிறார். அவர் நம் யுத்தங்கள் யாவற்றையும் முன்னின்று நடத்த, நமக்காக யுத்தம்பண்ண மனமுவந்திருக்கிறார். அவர் கல்வாரியில் நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்; அவர் ஏற்கனவே நமக்காக யுத்தம்பண்ணி வெற்றிசிறந்திருக்கிறார். நம்மை எப்போதும் வெற்றிசிறக்கப்பண்ணுகிறவர் அவரே! நம் கண்களை நாம் அவர் மேலேயே பதித்திருப்போமாக. நம்முடைய *'விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே நாம் ஓடக்கடவோம்'* (எபி. 12 : 1).

ஆடுகள் மிகவும் சாதுவான பிராணிகள் ஆகும். அவை யாரையும் துன்புறுத்துவதோ தாக்குவதோ இல்லை. நாமும் அவ்விதமே இருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நாம் நம்முடைய மேய்ப்பரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முடியும். அவர், *"சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்"* (சங். 25 : 9).

ஆடுகளுக்குக் காலங்களைக் குறித்த விசேஷமான பகுத்தறிவு உண்டு. அவை மலையுச்சியில் மேய்ந்துகொண்டிருக்கும்போது, பனி பெய்யப் போகிறதென்றால் அதைக் குறிப்பால் அறிந்துகொண்டு கீழே இறங்கிவிடும் என்று கூறப்படுகிறது. நாம் காலங்களையும் சமயங்களையும் அறிந்திருக்க வேண்டுமென்று கர்த்தர் தம்முடைய ஆடுகளாகிய நம்மைக் குறித்து விரும்புகிறார் (ரோமர் 13 : 11). நாம் கர்த்தருடைய ஆடுகளாயிருப்போமாயின், நமக்கு இந்த அறிவு இருக்கும். ஆகவே நாம் நம்முடைய மேய்ப்பரண்டை வருவோமாக. நாம் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்து இதுவரை ஒருவேளை அறியாமல் இருந்திருக்கக் கூடும். நாம் ஜீவிக்கிற இக்காலம் பற்றிய விழிப்புணர்வற்றவர்களாக நாம் காலம் கடத்திக்கொண்டிருக்கக் கூடும். ஆனால் இன்று நாம் நம்முடைய மேய்ப்பராகிய இயேசுவண்டை வருவோமாயின், அவர் நமக்கு இந்த அறிவை நல்குவார்.

நாம் நல்ல மேய்ப்பராகிய தமக்கே சொந்தமான ஆடுகளாயிருக்க வேண்டுமென்று தேவன் நம்மைக் குறித்து விரும்புகிறார். ஆகவே நாம் நம்முடைய மேய்ப்பரண்டை நெருங்கிச் சேருவோமாக.

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" என்று ஒரு நபர் கூறுவது, '*நான் எல்லாவற்றிற்கும், எதற்கும் அவரிலேயே முற்றிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன்*' என்று அந்நபர் அறிக்கை செய்வதாகப் பொருள்படும். நாம் இந்த நிலையை வந்தெட்டுவோமாயின், 23-ஆம் சங்கீதத்தில் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் அனைத்தும் இப்பொழுதும் எப்பொழுதும் நமக்கே உரியவையாயிருக்கும்! எல்லாவற்றுக்கும் நாம் கர்த்தரிலேயே நம்பிக்கை வைக்க வேண்டுமென 23-ஆம் சங்கீதம் நமக்குப் போதிக்கிறது. பரிசுத்த வேதாகமத்தின் அனைத்து வசனங்களுக்கும் மையமாக அமைவது சங்கீதம் 118 : 8 ஆகும். அது, "*மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்*" என்று கூறுகிறது. கர்த்தரில் நம்பிக்கையாயிருத்தலே நம் ஜீவியத்தின் மையமாயிருக்க வேண்டும் என்பதற்காகவே பரிசுத்த ஆவியானவர் இந்த வேதவாக்கியத்தைப் பரிசுத்த வேதாகமத்தின் மையப்பகுதியில் வைத்திருக்கிறார் போலும்! தேவன் உன் வாழ்க்கையின் மையமாய் இல்லாவிட்டால், அவர்தாமே உன் தீர்மானங்களின் மையமாக, உன் சிந்தனைகளின் மையமாக இருக்க இயலாது; அதினிமித்தம் உன் ஜீவியம் குழப்பமுள்ளதாய் இருக்கும். நீ எல்லாவற்றுக்காகவும் உன்னுடைய நம்பிக்கையைக் கர்த்தர் மேலேயே வைத்திருப்பாயாக. '*கர்த்தாவே, உம்முடைய ஒத்தாசை இன்றி என்னால் சுவாசிக்கவுங்கூட முடியாது*' என்று கூறக்கூடிய நிலையில் நீ இருக்க வேண்டும். கர்த்தரில் தங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிறவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். '*அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்* (most blessed - *மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவராக்குகிறீர்*); *அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். ராஜா கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்*' (சங். 21 : 6 , 7) என நாம் வாசிக்கிறோமே! மெய்யாகவே நீ கர்த்தரில் நம்பிக்கை வைத்திருப்பாயாகில், நீ அசைக்கப்படுவதில்லை; அவர் தம்முடைய முகத்தின் வெளிச்சத்தினால் உன்னை மிகவும் மகிழ்ந்து பூரிக்கச் செய்வார். கர்த்தரில் நம்பிக்கை வைக்காதவர்களோ, மிகுந்த வருத்தமடைந்து, என்றென்றும் சபிக்கப்பட்டவர்களாயிருப்பர்.

### "*நான் தாழ்ச்சியடையேன்*"

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு தேவைகள் உள்ளவனாயிருக்கிறான். அவன் தன் வாழ்க்கையில் அவ்வப்போது ஏதாகிலும் ஒன்று குறைவுபடுவதாக உணருகிறான். இப்பூமியில் ஜீவிக்கும் காலமளவும் அவன் திருப்தியடைவதே இல்லை. இவ்வுலகிலுள்ளவர்களிலேயே மிகப் பெரிய மனிதனுக்குங்கூட ஏதோ ஒரு குறைபாடு அல்லது தேவை இல்லாமல் இல்லை. நாம் யாவருமே ஏதாகிலும் ஒன்று நமக்குக் குறைவுபடுவதாக உணருகிறோம். தேவனால் மாத்திரமே நம்முடைய சகல வாஞ்சைகளையும் திருப்திப்படுத்தவும், நம்முடைய எல்லாத் தேவைகளையும் சந்திக்கவும் கூடும். தேவன் நம் தேவைகளைச் சந்திக்க வேண்டுமாயின், நாம் அவரை நம்முடைய மேய்ப்பராக ஏற்றுக்கொள்ள வேண்டும்; நாம் நம்மை ஆடுகளைப் போல அவருடைய கரங்களில் ஒப்படைக்க வேண்டும். நாம் நம்மை அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுத்தாலொழிய, அவரால் நம் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது. "*உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். ... கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு. அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்*" (நீதி. 3 : 6 – 8) என நாம் வாசிக்கிறோம். நம்முடைய நல்ல மேய்ப்பர் நாம் கடந்துசெல்லும் பாதைகளெல்லாவற்றையும் குறித்தும், நம் ஜீவியத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் அக்கறையுள்ளவராயிருக்கிறார் - நம் சரீரப்பிரகாரமானதும் ஆவிக்குரியதுமான சகல தேவைகளைப் பற்றியும் அவர் கரிசனையுள்ளவராயிருக்கிறார். அவர் நம்முடைய சரீரத்திற்குச் சுகத்தையும், நம் உள்ளான மனுஷனுக்குப் பெலத்தையும் அருளுகிறவர். நாம் இதை விளங்கிக்கொள்ள வேண்டும். அப்படியானால் நாம் நம் ஜீவியத்தில் எதைக் குறித்தும் கவலைப்பட மாட்டோம்.

நம் ஜீவியத்தின் எல்லாப் பகுதிகளையும் நுட்பமாகக் கவனித்துச் செயல்பட நம் மேய்ப்பரால் கூடும்; நம் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், அது ஒருவேளை நம்மால் விளங்கிக்கொள்ளக்கூட முடியாத ஒரு காரியமாயிருப்பினும், அதிலும் உதவிசெய்ய அவரால் கூடும். சங்கீதக்காரனுக்கு இந்த மேய்ப்பரைக் குறித்து மிகச் சிறந்ததோர் அறிவு இருந்தது; அவரோடுகூட அவனுக்கு நல்லதொரு பழக்கமும் இருந்தது. தாவீது தன் ஜீவியத்தின் எல்லா நிலவரங்களிலும் - தான் ஒரு மேய்ப்பனாய் இருந்தபோதும், சவுலின் ஆயுததாரியாய் இருந்தபோதும், ஒரு போர்வீரனாய் இருந்தபோதும், யுத்த மனுஷரின் மேல் அதிகாரியாக இருந்தபோதும், சவுலின் கைக்குத் தப்பி ஓடிக்கொண்டிருந்தபோதும்,

*(10 - ஆம் பக்கம் காண்க)*

# சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சத்தியத்தை அறிவிப்போம்!

1527 -ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து தேசத்தில் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த இருபத்து மூன்று வயது நிரம்பிய வாலிபனான பாட்ரிக் ஹாமில்டனுக்குத் (Patrick Hamilton) தனது வாழ்க்கையில் வெற்றிசிறந்து முன்னேறுவதற்கேதுவான அனைத்து வசதிகளும் இருந்தன. ராஜ வம்சத்தைச் சேர்ந்த அவர், புத்திக்கூர்மை உள்ளவராக, திறமை வாய்ந்தவராக, இனிமையான சுபாவங்கள் கொண்டவராக, அழகான தோற்றமுள்ளவராக இருந்தார். பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது மார்ட்டின் லூதருடைய போதனைகளை அவர் தழுவிக்கொண்டார். கிறிஸ்தவ விசுவாசத்துக்கும், மற்றும் ஒவ்வொரு தனி நபரும் தேவனிடத்தில் கொள்ளும் ஐக்கியத்துக்கும் மெய்யான அஸ்திபாரமாயிருப்பது பரிசுத்த வேதாகமமே அன்றி, அப்போதைய ஸ்தாபன சபையின் அதிகாரப்பூர்வமான கட்டளைகள் அல்ல என்று லூதர் நம்பிக்கை கொண்டிருந்தது போலவே இவரும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அவர் கொண்டிருந்த நம்பிக்கையினிமித்தம் விரைவிலேயே அவ்விடத்திலிருந்த சபை நிர்வாகம், மற்றும் ஆட்சியிலிருந்த வர்கள் மூலமாக அவருக்குப் பல உபத்திரவங்கள் உண்டாயின. எனவே அவர்களுடைய கைகளுக்குத் தப்பி, அவர் ஜெர்மனி தேசத்துக்குச் சென்றுவிட்டார்.

அங்கே, மார்பர்க் (Marburg) பல்கலைக்கழகத்தில் தன் கல்வியைத் தொடர்ந்த அவருக்குள் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. எந்தெந்த அம்சங்களில் அவர் மனுஷருக்குப் பயந்து ஒதுங்குகிறவராக இருந்தாரோ அவற்றிலெல்லாம் அவர் இப்போது தைரியமுள்ளவராக மாறியிருந்தார். ஒவ்வொரு நாளும் அவர் தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்துகொண்டிருந்தார்; தேவபக்தியானது அவருக்குள் அக்கினியைப் போல பற்றியெரிந்துகொண்டிருந்தது. எனவே தன்னுடைய சொந்த தேசத்தைச் சேர்ந்தவர்களிடத்திற்குத் தேவனுடைய வசனமாகிய சத்தியத்தைக் கொண்டுசெல்லும்படியாக அவர் ஸ்காட்லாந்து தேசத்திற்கே திரும்பிச் செல்லும்படியாகத் தீர்மானித்தார்.

அவர் ஸ்காட்லாந்துக்குத் திரும்பி வந்தபோது, தான் கற்றறிந்திருந்த சத்தியங்களை உடனடியாகப் பிரசங்கிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற்குப் பின் விசாரணைக்காகப் பேராயருக்கு முன் நிற்க வேண்டும் என அவருக்கு உத்தரவிடப்பட்டது. அங்கு அவர் பேச வேண்டிய சத்தியத்தைக் குறித்த பெருந்தீ அவருக்குள் பற்றியெரிந்துகொண்டிருந்தது. எனவே அங்குச் செல்லும்படியாக அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த நேரம் வரும் வரை அவர் காத்திருக்க விரும்பவில்லை; அதிகாலை யிலேயே அவர் அங்குப் போய்ச் சேர்ந்தார்.

அவர் தன்னுடைய தரப்பில் வல்லமையுடன் தைரியமாக வேதவசனங்களின் அடிப்படையில் நியாயங்களை எடுத்துரைத்தார். இருப்பினும் அவர் கைதுசெய்யப்பட்டுச் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டார். அவரை நேசித்த அநேகர் அவர் தன்னுடைய மனதை மாற்றிக்கொள்ளும்படி அவரை இணங்கச்செய்வதற்கு முயற்சித்தனர். அவர் பிரசங்கித்தவை அப்போதைய ஸ்தாபன சபையைக் கலக்கமடையச் செய்வதற்கேதுவானவையாக இருந்தபடியால், அவர் தான் விசுவாசித்திருந்தவைகளைப் பிரசங்கிப்பதையாவது நிறுத்த வேண்டும் என்று அவர்கள் அவரிடம் கேட்டுக்கொண்டனர். ஆனால் அவரோ தன்னுடைய தீர்மானத்தை விட்டுப் பின்வாங்கவே இல்லை. உண்மையில் அவருடைய விசுவாசமானது தொற்றுநோயைப் போல மற்றவர்களை எளிதில் பற்றிப்பிடித்துக்கொள்ளும் தன்மையுடையதாயிருந்தது. அதினிமித்தம், அவரைச் சந்திக்கும்படியாக அவருடைய சிறை அறைக்கு வந்த கத்தோலிக்கக் குருவானவர் ஒருவருங்கூட மனந்திரும்பி சத்தியத்தை ஏற்றுக்கொண்டார்.

ஹாமில்டனுக்கு மரண தண்டனைக்குரிய தீர்ப்பு நிறைவேற்றப்படுவதற்கான நாள் வந்தது. அந்நாளில் இரவு உணவுக்குப் பின் அவர் கழுமரத்தில் வைத்து எரிக்கப்படும்படியாகக் கொண்டு செல்லப்பட்டார். கழுமரத்துடன் சேர்த்துக் கட்டப்பட்டவராக நின்றுகொண்டிருக்கையில் அந்த அழகான வாலிபன் தனக்கு உதவியாயிருந்த தன் பணியாளின் பக்கமாகத் திரும்பி, ‘அன்பான நண்பனே, நான் அநுபவிக்கப்போகும் வேதனையானது மாம்ச சரீரத்திலிருக்கும் நமக்குப் பயத்தையும் கசப்பையும் உண்டாக்கக்கூடியதாக இருப்பினும், அதுவே நித்தியமான வாழ்க்கைக்குள், நித்திய ஜீவனுக்குள்

பிரவேசிக்கும் வாசலாக இருக்கிறது. தங்களுடைய ஆண்டவரை மறுதலிக்கிற ஒருவரும் அதற்குள் பிரவேசிக்க முடியாது என்பதை நீ நினைவிற்கொள்வாயாக!' என்று கூறி, அவனை ஆறுதல்படுத்தினார். அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றும்படியாக நியமிக்கப்பட்டவர்களுக்கு அந்தக் கழுமரத்தில் நெருப்பைத் தொடர்ந்து எரிய வைப்பதில் சிரமம் ஏற்பட்டு, அதற்குச் சற்றுத் தாமதம் ஏற்பட்டது. அந்த நேரத்தையும் கூடத் தனக்கு அருகில் நின்றுகொண்டிருந்தவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கான கடைசி வாய்ப்பாக அவர் பிரயோஜனப்படுத்திக் கொண்டார். 'தேவனே! எவ்வளவு காலம் அந்தகாரம் இந்த ராஜ்யத்தை மூடிக்கொண்டிருக்கும்? மனுஷர்களின் கொடுங்கோலாட்சியை எவ்வளவு காலம் நீர் அனுமதிப்பீர்?' என்று அவர் தேவனை நோக்கி அபயமிட்டார்.

முடிவில், அக்கினியால் அவர் சுட்டெரிக்கப்பட்டார். அவர் மரித்துக்கொண்டிருக்கையில், *'கர்த்தராகிய இயேசுவே, என்னுடைய ஆவியை ஏற்றுக்கொள்ளும்'* என்று அவர் சத்தமிட்டுக் கூறினார். அவர் கழுமரத்தில் எரிக்கப்பட்ட நாளன்று, ஒரு நபர், அவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றியவர்களை அணுகி, தைரியத்துடன், 'நீங்கள் இனி யாரையாகிலும் அவர்கள் கைக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ சத்தியத்தினிமித்தம் சுட்டெரிப்பீர்களேயாயின், அதை இரகசியமான ஓரிடத்தில் வைத்து செய்வது நல்லது. ஏனென்றால் தேவமனிதராகிய ஹாமில்டன் அவர்கள் சுட்டெரிக்கப்பட்டபோது எழும்பிய புகையானது நூற்றுக்கணக்கானவர்கள் சத்தியத்தைத் தழுவிக்கொள்வதற்கேதுவாக அவர்களுடைய மனக்கண்களைத் திறந்திருக்கிறது' என்று கூறினார்.

கர்த்தராகிய இயேசுவுக்காக இரத்தசாட்சிகளாக மரிக்கிறவர்கள் அவரைக் குறித்துச் சாட்சி கூறுவதற்குத் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு தருணத்தையும் தங்களால் இயன்ற அளவுக்கு உபயோகப்படுத்திக்கொள்கின்றனர். பாட்ரிக் ஹாமில்டன் சிறைச்சாலையிலும் பிரசங்கித்தார்; கழுமரத்தில், தான் சுட்டெரிக்கப்பட்டுக்கொண்டிருக்கையிலும் பிரசங்கித்தார். தேவபிள்ளைகளாகிய நம்மைப் பற்றி என்ன? சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நமக்குக் கிடைக்கும் தருணங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஆதாயப்படுத்திக்கொள்கிறோமா?

*"கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்"* (அப். 20 : 23, 24) என்று அப். பவுல் கூறினாரன்றோ!

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நாம் சத்தியத்தை அறிவிப்போம்!**

*********

## 23-ஆம் சங்கீதத்தின் இனிமை *(8 -ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வனாந்தரங்களில் ஒரு நாடோடியாக அலைந்து கொண்டிருந்தபோதும் - கர்த்தரைத் தன் மேய்ப்பராக அநுபவித்தறிந்தான். பின்னாட்களில் அவன் ஒரு ராஜாவாக இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வந்தபோதுங்கூடக் கர்த்தரைத் தன் மேய்ப்பராக அநுபவித்தான். நாம் ஒரு சிறு பிள்ளையாக இருக்கக் கூடும்; அல்லது இளைஞராகவோ அல்லது முதியோராகவோ இருக்கக் கூடும்; ஆயினும் ஒரு உண்மை மாறாததாய் நிலைநிற்கிறது. அது, கர்த்தர் நம் மேய்ப்பராயிருக்கிறார் என்பதே! எந்த நபருக்கும் மேய்ப்பராயிருக்க அவரால் கூடும்; எந்த நபரையும் விளங்கிக்கொள்ளவும் அவரால் கூடும். ஆகவே நாம் இந்த மேய்ப்பரில் நம்பிக்கை வைத்து, அவரிலிருந்து வரும் ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவிப்போமாக!

(தொடரும்)

* *'சிலுவையின் மார்க்கம் ஒன்று மட்டுமே ஒரு நபரை நித்திய வீட்டிற்கு வழிநடத்துவதாயிருக்கிறது'.*
* *'கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது, திரைச்சீலைக் கிழிக்கப்பட்டிருக்கிறது. நீ தேவசமுகத்திற்குள் வரவேற்கப்படுகிறாய்'.*

## அனுபவ சாட்சி

# ஆத்தும நேசரின் மாறாத அன்பு!

டி.பி.எம். சபையைச் சேர்ந்த என் பெற்றோருக்குத் தேவன் தந்த மூன்று பெண் பிள்ளைகளில் நான் மூத்த மகளாகப் பிறந்தேன். நாங்கள் வேதாகம சத்தியங்களுக்கேற்ப, தேவபயத்தில் வளர்க்கப்பட்டோம். இளவயதிலிருந்தே என் தேவைகளுக்காகத் தேவனிடம் ஜெபிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. ஆனால் நான் வளரவளர, தேவனை அறியாத இவ்வுலகப் பிள்ளைகளுக்கும், எனக்கும் அதிகமான வித்தியாசம் இல்லாத விதத்திலேயே ஜீவித்துவந்தேன்.

என்னுடைய பன்னிரண்டாவது வயதில், நான் துவக்கப் பள்ளியிலிருந்து மேல்நிலை பள்ளிக்குச் சென்றபோது, அங்குக் கண்டிப்பாக ஆங்கிலம் பேச வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஆனால் எனக்கு ஆங்கிலத்தில் சரியான அடிப்படை அறிவில்லாமலிருந்தது. எனவே நான் ஆங்கிலத்தில் பேசக் கூடாதவளாயிருந்தேன். அதினிமித்தம் நான் சில சமயங்களில் பள்ளியில் தண்டிக்கப்பட்டு, மிகவும் அதைரியமடைந்தேன். பிற்பாடு, நான் வகுப்பறையில் ஊமையைப் போல அமைதியாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். இதனால் என் ஆசிரியர்கள் என்னைக் குறித்து நான் மனநிலை பாதிக்கப்பட்டவள் என்று நினைத்தார்கள். அப்போது என் தாயார், நான் யாக்கோபு 1 : 5 - ஐ அறிக்கைசெய்து, முழங்கால்களில் நின்று தினமும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டுமென்று எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள். நான் அப்படிச் செய்துவந்தபோது, குறுகிய காலத்திற்குள்ளாகவே ஆங்கிலத்தில் சரளமாய்ப் பேசுவதற்குத் தேவன் ஆச்சரியவிதமாய் எனக்கு உதவிசெய்தார்.

நான் சிறுவயதிலேயே கர்த்தரை என் பரிகாரியாக ருசித்தறியக் கர்த்தர் எனக்குப் பாராட்டிய அவருடைய தயவுக்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். அடிக்கடி என் மூக்கிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அதற்காக நான் உபவாசித்து ஜெபித்தேன். தேவன் என்னைச் சுகமாக்குவதாக எனக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். அதை நான் விசுவாசித்தேன்; மெய்யாகவே தேவன் என்னைக் குணமாக்கினார். ஒருமுறை நான் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த வழியில், ஒரு விபத்திற்குள்ளாகி, என் வலது காலில் இலேசான எலும்பு முறிவு உண்டானது; என் வலது தோளில் பலமான காயமும் ஏற்பட்டது. நாங்கள் குடும்பமாய் ஜெபித்தபோது, எவ்வித மருத்துவச் சிகிச்சையும் இன்றி, கர்த்தர் என்னைச் சுகமாக்கினார்.

*"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்"* என்ற சத்தியத்தை நான் அறிந்துகொண்டபோது, என்னைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கும்படியாகத் தேவனிடம் ஜெபித்தேன். ஒரு காத்திருப்புக் கூட்டத்தில் என்னுடைய குற்றங்களை நான் ஆண்டவரிடம் அறிக்கைசெய்து ஜெபித்தபோது, பெரிதான இரட்சிப்பின் சந்தோஷத்தைக் கர்த்தர் எனக்குத் தந்தார்; பரிசுத்த ஆவியினாலும் என்னை நிறைத்தார். அதே ஆண்டில் நான் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் அவர் எனக்கு அருள்செய்தார். அதைத் தொடர்ந்து தேவன் என் படிப்பை ஆசீர்வதித்தார். தேவன் எனக்கு ஞானம் தந்து, நான் சிறுமைப்படுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டிருந்த அதே பள்ளியில் உயர்த்தப்படவும், அவருக்குச் சாட்சியாக நிற்கவும் எனக்கு உதவிசெய்தார்.

என் பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர் என்னுடைய மேற்படிப்புக்காக நான் கல்லூரியில் சேர்ந்தபோது, இவ்வுலக வேஷத்திற்கு ஒத்ததாய் என் வாழ்க்கை முறையை நான் மாற்றியமைத்துக் கொண்டேன். என் முகத்தின் நிறத்தை வெண்மையாகப் பராமரிப்பதற்காகக் முகப்பூச்சுகள் (cream), மற்றும் தைலங்கள் போன்றவற்றை நான் பயன்படுத்தத் தொடங்கினேன். இதைக் குறித்து என் பெற்றோர் என்னைக் கண்டித்தபோது நான் அவர்களை எதிர்த்தேன். ஆகவே, அவர்கள் எனக்காக உபவாசித்து ஜெபித்தார்கள்.

என்னுடைய இளநிலை பட்டப்படிப்பின் முடிவிலே, எனக்கு நல்ல ஒரு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அவ்விடத்திலும் நான் சிறந்து விளங்கத் தேவன் எனக்கு உதவிசெய்தார். எனக்கு அதிகமான சிநேகிதிகள் இருந்தனர், தேவைக்கேற்ப பணமும் என் கையில் இருந்தது. ஆனால், மரணத்தையும் நரகத்தையும் பற்றிய பயம் என்னை அடிக்கடி அச்சுறுத்திக்கொண்டிருந்தது. ஆகவே, என் ஜீவியத்தை எப்படியாவது மாற்றும்படியாக நான் தேவனிடம் ஜெபிக்கத் தொடங்கினேன். 2016 -ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், 'நீ என் அன்புக்கு அந்நியமாய் நடந்தாலும், நான் உன்னை நேசிக்கிறேன். யாக்கோபைப் போல வனாந்தரத்திற்கு வா, நான் உனக்கு நித்திய வழியைக் காண்பிப்பேன்' என்று தேவன் என்னோடு பேசினார்.

ஒருநாள் அதிகாலையில் நான் தூங்கிக் கொண்டிருந்தபோது, என் ஆத்துமா என்னை விட்டுப் பிரிந்து ஒரு இருண்ட இடத்தை நோக்கிச் சென்றது. எனக்கு எதிரே ஒரு பிசாசு வந்தது. அது என்னை நரகத்திற்குக் கொண்டுசெல்லுவதாக நான் உணர்ந்தேன். அப்போது, 'இயேசுவே, எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுப்பீரென்றால் நான் உமக்காக ஜீவிப்பேன்' என்று நான் சத்தமிட்டேன். உடன் தானே வானத்திலிருந்து ஒரு மின்னல் தோன்றி, என்னை அந்தப் பிசாசிடமிருந்து பிரித்தது. அச்சம யத்தில், 'இயேசுவே, நீர் என்னை மெய்யாகவே நேசிக்கிறீரா?' என்று நான் கேட்டேன். அப்போது சத்தத்தோடே கூடிய ஒரு அக்கினி, 'ஆம், க்றிஸ்' (கிறிஸில்டா என்னும் என் பெயரின் சுருக்கம்) என்ற வார்த்தைகளை எனக்கு இரண்டு முறை எழுதிக் காண்பித்தது. உடனே நான் எழுந்து, முழங்கால் களில் நின்று என்னை முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகத் தீர்மானித்து ஜெபித்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பின், என் சரீர மெல்லாம் முட்களால் குத்தப்படுவதைப் போன்ற ஒரு வேதனையை நான் உணர்ந்தேன். நான் யார் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாத அள விற்கு என் சரீரத்தின் தோற்றம் மாறியது. 'அழகு வீண்' என்பதைத் தேவன் எனக்குக் கற்பித்து, என்னைத் தம்முடைய சுபாவங்களினால் அலங் கரிப்பதாக எனக்கு வாக்களித்தார். அத்துடன் வேத வசனங்களின் மூலம் தம்முடைய கனமான ஊழி யத்திற்கான என்னுடைய அழைப்பைத் தேவன் எனக்கு உறுதிப்படுத்தினார். என் இருதயத்தின் எல்லா வாஞ்சைகளையும் என் ஜீவியத்தில் தேவன் அருளிச் செய்தார். பின்னர், 'சகலமும் மாயை யும் சூனியமுமாயிருக்கிறது. அவைகள் என்னை நரகத்திற்கே இழுத்துச் செல்லும்' என்று நான் உணர்ந்துகொள்ள அவர் எனக்கு உதவிசெய்தார்.

2016 - ஆம் ஆண்டு நான் இந்தக் கனமான ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்தேன். நான் ஊழியத்திற்கு வந்த பின் எனக்கு வந்த சிற்சில வியாதிகளில் பரிசுத்தவான்களின் அறிவுரையின்படி ரோமர் 8 : 11 -ஐ அறிக்கையிட்டு ஜெபித்தபோது கர்த்தர் எனக்குச் சுகமளித்தார். இம்மட்டுமாய் என்னைக் கிருபையாகப் பாதுகாத்துவந்த தேவன், முடிவுபரியந்தமும் என்னை நிலைநிறுத்துவார் என்று விசுவாசித்து, என்னை முழுவதுமாய் அவ ருக்கு ஒப்படைக்கிறேன். அவருக்கே மகிமை!

**சகோதரி கிறிஸில்டா ஷாரோன்**
**சென்னை**

**********

## STATEMENT OF OWNERSHIP & OTHER PARTICULARS ABOUT PENTHECOSTHIN PEROLI FORM - IV


| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | Pentecost Press Trust, Chennai-63. |
| 2. | Periodicity of Publication | Monthly |
| 3. | Printer's name (Whether citizen of India) Address | Pastor Mayalil Thomas Thomas<br>Indian<br>C/o Pentecost Press Trust, Roja Street, S.V. Nagar Post, Irumbuliyur, Chennai-600063. |
| 4. | Publisher's name (Whether citizen of India) Address | -do- |
| 5. | Editor's name (Whether citizen of India) Address | Pastor D. John<br>Indian<br>C/o Pentecost Press Trust, Roja Street, S.V. Nagar Post, Irumbuliyur, Chennai-600063. |
| 6. | Name and Addresses of individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital. | Pentecost Press Trust, Roja Street, S.V. Nagar Post, Irumbuliyur, Chennai - 600063. |

I, Pastor Mayalil Thomas Thomas, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 4. 3.'22

Pastor Mayalil Thomas Thomas,
Printer & Publisher.

## இளைஞர் பகுதி ☞

# அன்பின் ஊற்று!

கிரீஸ் தேசத்தின் வட பகுதியிலுள்ள ஒலிம்ப்பஸ் மலையின் அடிவாரத்தில், கோடைக் காலங்களில் உல்லாசப் பயணிகள் தங்கும்படியாகச் சிறுமனைகளும் கூடாரங்களும் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்த ஓரிடம் இருந்தது. அந்த இடமானது, முற்றிலும் நீல நிறமாகக் காட்சியளிக்கும் ஏஜியன் கடலை ஒட்டி, அதன் கடற்கரைப் பகுதியில்தானே அமைந்திருந்தது. அந்தக் கடலின் தண்ணீர் மிக அதிகமான உப்பு நிறைந்ததாக இருக்கும். கடலோரப் பகுதியில் உப்புத் தண்ணீர் அலைகள் ஓயாமல் புரண்டு வந்துகொண்டேயிருக்கும். அந்த அலைகள் சற்றுப் பின்வாங்கும்போது கடற்கரை மணலை ஒருவர் ஒருசில அங்குலங்கள் மட்டுமே தன் கைகளைக் கொண்டு தோண்டினால் போதும்; அக்குழிகளில் மிக இனிமையான, நல்ல தண்ணீர் நிரம்பிவிடும். அத்தண்ணீர் சுவை மிகுந்ததாய் இருக்கும். அது, அருகிலுள்ள அம்மலையிலிருந்து ஓடிவரும் தண்ணீர் ஆகும். ஆனால் அத்தண்ணீர் சமுத்திரத்தின் கரையிலுள்ள மணலுக்குள் பாய்ந்துவருவது மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாததாய் இருக்கும். அம்மணலைத் தோண்டினால் மட்டுமே ஒருவரால் அதைக் கண்டுகொள்ள முடியும். கடலலைகள் மீண்டும் மீண்டும் புரண்டு வருகையில், கடலின் மிக அதிக உப்புள்ள தண்ணீர் அந்தச் சிறிய குழிகளுக்குள் இறங்கும்; புரண்டு வரும் கடலலைகள், உப்பு நீரைக்கொண்டு அந்தக் குழிகளை அடிக்கடி நிரப்பிக்கொண்டே இருந்தாலும், இனிமையான தண்ணீர் தொடர்ந்து அதில் பாய்ந்துகொண்டே இருக்கும். கடல் நீரின் உப்புச் சுவையினிமித்தம் அக்குழிகளுக்குள் இருக்கும் தண்ணீரின் இனிய சுவையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிராது!

அன்பான வாலிபனே! ஏஜியன் கடற்கரையில் இயற்கையில் நாம் காணும் இந்நிகழ்வு, உனக்குப் போதிப்பது யாது? அக்கடற்கரையில் மிக அதிக உப்புச் சுவையுள்ள கடல் அலைகள் இனிமையான ஊற்று நீரின் மீது புரண்டு வந்துகொண்டேயிருந்தது போல, தேவபிள்ளைகளாயிருக்கும் நம்மோடுள்ள மற்றவர்கள் ஓயாமல் நம்மிடம் இரக்கமற்ற விதத்தில் செயல்படக் கூடும்; தவறாக நம்மைக் குற்றஞ்சாட்டக் கூடும்; பிறர் மூலம் பல விதமான அநியாயங்களை நாம் சகிக்க வேண்டியது நேரிடலாம். எனினும் நமக்குள் தேவ அன்பின் ஊற்றுப் பெருக்கெடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அந்த ஊற்றானது எப்போதும் தூய்மையானதாகவும் இனிமையானதாகவும் நமக்குள் சுரந்துகொண்டே இருக்க வேண்டும் என்பதை இது உனக்கு உணர்த்துவதாயிருப்பதாக!

முழு உலகத்தையும் உண்டாக்கிய தேவனைக் குறித்து, *"தேவன் அன்பாகவே இருக்கிறார்"* (I யோவான் 4 : 8) என்று நாம் வாசிக்கிறோம். அது அவருடைய மாறாத சுபாவம் ஆகும். அவர் அன்பின் சொரூபியாய் இருப்பதினால் அவரால் நம்மை நேசிக்காமல் இருக்க முடியாது. அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே நம்மைத் தெரிந்துகொண்டார் (எபே. 1 : 4). தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகித்து, தங்கள் சத்துருக்களைப் பகைப்பது மனித இயல்பு. ஆனால் கர்த்தராகிய இயேசுவோ, தம்மைப் பின்பற்றுகிற தேவஜனங்களாகிய நம்மைக் குறித்து, நாம் முற்றிலும் வேறுபட்ட சுபாவம் உள்ளவர்களாக விளங்க வேண்டுமென்று விரும்புகிறார். எனவே உலகிலுள்ள ஒரு நபரையும் பகைக்க நமக்கு அனுமதியில்லை. நமக்குத் தீங்கிழைக்கிறவர்களை நாம் பகைப்பதைப் பரிசுத்த வேதாகமம் அனுமதிப்பதில்லை. வாலிபனே! உனக்கு விரோதமாகக் கிரியை செய்கிறவர்களை நீ நேசிக்கும்படியாகவே தேவன் உன்னையும் அவர்களையும் ஒன்றாக இப்பூமியில் வைத்திருக்கிறார். உன்னுடைய மெய்யான எதிராளி சாத்தான் மாத்திரமே. அவனையும் அவனுடைய கிரியைகளையும் மட்டுமே நீ வெறுக்க வேண்டும். மனுஷர் அனைவரையும் நீ நேசிக்க வேண்டும். இது உனக்குக் கைக்கொள்வதற்குக் கடினமான ஒரு பிரமாணம் போல தோன்றினாலுங்கூட, கர்த்தராகிய இயேசு தம்முடைய ஜீவியத்தில் நடைமுறையில் இப்படிச் செய்து, நீ பின்பற்றும்படி உனக்குச் சிறந்த மாதிரியைக் காண்பித்திருக்கிறார். அதற்குத் தேவையான கிருபையை உனக்கு அருளவும் அவர் ஆயத்தமுள்ளவராயிருக்கிறார்.

எந்தச் சூழ்நிலையாலும், உன்னுடன் வைக்கப்பட்டுள்ள எந்த நபராலும் - உன் நற்பண்புகள் பாதிக்கப்பட முடியாது என்பதற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக யோசேப்பு திகழுகிறான். அவனது இளமைப்பருவத்தில் அவன் வைக்கப்பட்டிருந்த சூழ்நிலையைச் சற்று நீ சிந்தித்துப் பார்ப்பாயாக.

இளைஞனான யோசேப்பு தன்னுடைய பதினேழு வயதிலே தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளாகிய பில்காள், சில்பாள் என்பவர்களின் குமாரரோடு சேர்ந்து ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அவர்கள் துன்மார்க்கராயிருந்தார்கள் (ஆதி. 37 : 2). அவர்களுடைய துன்மார்க்கமான ஜீவியம் அவன் கண்களுக்கு முன்பாக வெளியரங்கமாயிருந்தது. அவனுடைய சகோதரர்களில் சிமியோனையும் லேவியையும் குறித்து, அவர்கள் பட்டயங்கள் கொடுமையின் கருவிகள் என்றும், உக்கிரமான அவர்கள் கோபமும், கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது என்றும் கூறப்பட்டுள்ளது (ஆதி. 49 : 5 -7).

யோசேப்போ தன் சகோதரர்களிலிருந்த துன்மார்க்கமான சுபாவங்கள் தன்னில் ஒட்டிக்கொள்ள எவ்வளவேனும் இடமளிக்கவில்லை. இது உனக்கு நல்லதோர் மாதிரியாயிருப்பதாக! நீ கல்வி கற்கும் இடத்திலோ, பணிபுரியும் ஸ்தலத்திலோ உன்னிடம் கடினமாகச் செயல்படும் மனுஷர்களை நீ சந்திக்கக் கூடும். அவர்களைத் தேவன்தாமே உன் ஜீவியத்தில் அனுமதித்திருக்கிறார். அந்நேரங்களில் நீ அவர்கள் மேல் கசப்பு, கோபம், பகையுணர்வு போன்றவை உள்ளவனாய், அவர்களுடைய தீய சுபாவங்களுக்கு உடன்பட்டு, அவர்களைப் போல மாறி, உன் ஜீவியத்தின் தூய்மையை இழந்து, உன்னைக் கறைப்படுத்திக்கொள்கிறாயா என்று தேவன் உன்னைக் கவனிக்கிறார்.

மேலும் யோசேப்பின் சகோதரர்கள் அவனைக் காரணமில்லாமல் பகைத்தனர் (ஆதி. 37 : 4, 5); அவன் மேல் பொறாமைகொண்டு அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனை செய்து வெறுங்குழியில் போட்டனர் (வச. 11, 18, 24); இஸ்மவேலருக்கு விற்றுப்போட்டனர் (வச. 28). இவற்றின் மத்தியிலும் யோசேப்புக்கு அவன் சகோதரர்கள் மேல் பகை, பொறாமை, கசப்பு ஆகியவற்றின் ஒரு சிறு அம்சங்கூட உண்டாகவில்லை! மாறாக, அவன் அவர்களை நேசித்தான். தானியம் கொள்ளும்படி பின்னாட்களில் இச்சகோதரர்கள் அவனிடம் வந்தபோதெல்லாம் அவர்களுடைய அனைத்துச் சாக்குகளையும் அவன் நிரப்பி அனுப்புகிறான்; அவற்றை இலவசமாகவே கொடுத்துவிடுகிறான்; அவர்களுடைய வழிப்பிரயாணத்துக்குத் தேவையானவைகளும், அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனமும் அவர்கள் கேட்காமலேயே அவர்களுக்குக் கொடுக்கிறான்; அவர்களுக்குத் தன் வீட்டில் ராஜவிருந்து ஆயத்தம்பண்ணுகிறான் - இவை அனைத்தும், அச்சகோதரர்களை ஆழ்ந்த அன்புடன் தான் நேசித்ததை வெளிப்படுத்த விரும்பி, அவன் செய்த அன்பின் கிரியைகளன்றோ! அவர்கள் தகப்பன் மரணமடைந்தபோது அச்சகோதரர்கள், யோசேப்பு தங்களைப் பழிவாங்கக் கூடும் என்று எண்ணி, பயந்தனர்; எனினும் அவன் அவர்களைத் தைரியப்படுத்தி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான் (ஆதி. 50 : 15 - 21).

சின்ன சாமுவேலைப் பற்றி என்ன? அவன் சிறு பாலகனாயிருந்ததுமுதல் ஏலியின் குமாரர்களோடே வைக்கப்பட்டிருந்தான். அவர்கள் துன்மார்க்கமான ஜீவியம் செய்துவந்தனர் (I சாமு. 2 : 12, 22, 23). ஆனால் அது சாமுவேலின் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பாதிக்கவில்லை! அவன் தன்னுடைய பரிசுத்தத்திற்குப் பங்கம் வராமல் தன்னைக் காத்துக்கொண்டான். '*மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்*' (I தீமோ. 5 : 22) என்று திருவசனம் உன்னை எச்சரிக்கிறது. உன் ஜீவியம் கலங்கின கிணற்றுக்கும், கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பானதாயிராதபடி நீ உன்னைக் காத்துக்கொள்வாயாக (நீதி. 25 : 26); எப்போதும் தூய்மையான, இனிமையான நற்சுபாவங்களையே வெளிப்படுத்துவாயாக.

தாவீது உயிரோடிருந்த நாளெல்லாம் சவுல் அவனுக்குச் சத்துருவாயிருந்தான் (I சாமு. 18 : 29). அவனை அவன் நிந்தித்தான் (I சாமு. 20 : 30, 34); அவனைக் காய்மகாரமாய்ப் பார்த்தான் (I சாமு. 18 : 9); அவன் மேல் ஈட்டியை எறிந்து அவனைக் கொல்ல முயற்சித்தான் (I சாமு. 18 : 10, 11 ; 19 : 9, 10). ஆனால் இவையெல்லாவற்றிற்கும் பதிலாகத் தாவீதுடைய பிரதிக்கிரியைகள் எவ்விதமிருந்தன? அவன் தன் கையினால் சுரமண்டலத்தை எடுத்து வாசித்து சவுலுக்கு ஆறுதலும் சொஸ்தமும் உண்டாகும்படி செய்தான் (I சாமு. 18 : 10 ; 19 : 9 ; 16 : 23). ஒருபோதும் அவன் சவுலைப் பழிவாங்கவில்லை; அவனைக் கொல்லும்படியாய் அவனுக்கு ஒருசில சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதிலும், '*அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். அவர் மேல் என் கையைப் போடுவதில்லை*' (I சாமு. 24 : 10 ; 26 : 9, 11) என்று அவன் கூறுகிறான். சவுலை அவன், "*என் ஆண்டவனே*", "*என் தகப்பனே*" என அழைத்துக் கனம்பண்ணுகிறான் (I சாமு. 24 : 8, 11); முடிவில் அவன் மரித்தவுடன், '*இஸ்ரவேலின் அலங்காரம்*', '*பராக்கிரமசாலி*' என்றெல்லாம் அவனைப் புகழ்ந்து புலம்பல் பாடுகிறான் (II சாமு. 1 : 17, 19). இவை அனைத்தும் தாவீது தன் உள்ளார்ந்த அன்புடன் மிகச் சிறந்த விதத்தில் சவுலுடன் செயல்பட்ட பிரதிக்கிரியைகள் என்பதை நம்மால் மறுக்க முடியுமோ?

அன்பான வாலிபனே! நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருந்தபோது நம்மை நேசித்து, தம்முடைய சொந்த ஜீவனையே நமக்காகக் கொடுத்து, நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்ட கர்த்தராகிய இயேசுவின் இனிய அன்பை நீ சிந்திப்பாயாக. யூதர்கள், பரிசுத்தமும் நீதியுமுள்ளவராகிய அவரை நியாயமான காரணமின்றிப் பகைத்தனர்; பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர் மேல் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள் (லூக்கா 23 : 10); அவரைக் கொலை செய்யும்படியாகப் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டனர் (மத். 27 : 20); போர்ச்சேவகர் அவரைப் பரியாசம்பண்ணினர் (வச. 27 - 31); வழியில் நடந்துபோகிறவர்கள் அவரைத் தூஷித்தனர் (வச. 39, 40); முடிவாக, அவர் சிலுவையில் அறையப்பட்டார். எனினும் அவர், "*பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே*" என்று அவர்களுக்காகப் பிதாவிடம் வேண்டிக்கொண்டார் (லூக்கா 23 : 34). தம்மோடுகூடவே இருந்து சகல நன்மைகளையும் அநுபவித்த சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுத்த போதும் அவனை, "*சிநேகிதனே*" என அவர் அன்புடன் அழைத்தார்! (மத். 26 : 48 - 50). "அந்த மனுஷனை அறியேன்" என்று தம்மைச் சபித்து, சத்தியம்பண்ணி, மறுதலித்த பேதுருவை அவர் கனிவுடன் திரும்பிப் பார்த்தார்; அவர் உயிர்த்தெழுந்த பின்னர் மீண்டுமாய் அவனைத் தம்மோடு சேர்த்துக்கொண்டார் (மத். 26 : 74 ; லூக்கா 22 : 61 ; மாற்கு 16 : 7 ; யோவான் 21 : 1 - 19). என்னே அவரது ஈடு இணையற்ற அன்பு!

தேவ அன்பு என்பது பெரிதும் பலம் வாய்ந்ததுமான ஓர் ஆயுதமாக இருக்கிறது. "*நேசம் மரணத்தைப்போல் வலிது*" (உன். 8 : 6); "*திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது*" (வச. 7). 'திரளான தண்ணீர்கள்' என்பது, நீ சந்திக்கும் புறக்கணிப்புகள், தாழ்த்தப்படுதல், பகைக்கப்படுதல், அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்படுதல் போன்றவற்றைக் குறிக்கிறது. இவ்விதம் உன்னைத் துன்புறுத்துகிறவர்களைத் தூய்மையான கல்வாரி அன்பினால் நிறைந்து உன்னால் நேசிக்க முடிகிறதா? அவ்விதம் நீ அவர்களை நேசிக்கக் கற்றுக்கொள்வாயாகில், பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு நீ புத்திரனாயிருப்பதை விளங்கப்பண்ணுவாய் (மத். 5 : 44, 45). மூர்க்க வெறியுடன் தன்னைச் சூழ நின்று கல்லெறிந்தவர்களுக்காக, "*இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்*" என்று தம்மை நோக்கி மிகுந்த சத்தத்தோடே மன்றாடிய ஸ்தேவானைப் பரலோகத்திற்கு வரவேற்கும்படியாக, தம்முடைய சத்துருக்களை மன்னிக்கும்படி கல்வாரிச் சிலுவையில் வேண்டிக்கொண்ட ஆண்டவராகிய இயேசுதாமே, பிதாவின் வலதுபாரிசத்தில் எழுந்து நின்ற காட்சி உனக்குப் பரவசமளிப்பதாயிருப்பதாக! (லூக்கா 23 : 34 ; அப். 7 : 54 - 60).

தேவபிள்ளையே, உனக்கு விரோதமாய் மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதல்ல, நீ பதிலீடாக அவர்களுக்கு என்ன செய்தாய் என்பதே நீ தேவனிடம் ஒப்புவிக்க வேண்டிய கணக்காக இருக்கிறது. உனக்குத் தீங்கிழைக்க முயற்சிப்பவர்களுக்குக் கிறிஸ்துவின் மன்னிப்பையும் அன்பையும் மனதுருக்கத்தையும் சாந்தத்தையும் தாழ்மையையும் உன் நடக்கையின் மூலம் நீ வெளிப்படுத்திக் காண்பிப்பாயாகில், அவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்வாய்; ஒரு ஊற்றானது அநேகருக்கு நன்மை பயப்பதாயிருப்பது போன்று, பரிசுத்த ஆவியினாலே உனக்குள் ஊற்றப்பட்டிருக்கும் தேவ அன்பின் ஊற்றிலிருந்து புறப்பட்டுவரும் அனைத்துத் திவ்ய சுபாவங்களின் மூலமாக நீ அநேகருக்கு ஆசீர்வாதமாகத் திகழ்வாய்!

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு!

இவ்வாண்டில் நீங்கள் உங்கள் சந்தாவைப் புதுப்பிக்கத் தவறியிருப்பீர்களாயின், உடனடியாகவே அதைப் புதுப்பிக்குமாறு நாங்கள் உங்களுக்கு நினைவூட்டுகிறோம். நாங்கள் உங்களுக்குப் பேரொலியைத் தொடர்ந்து அனுப்ப அது உதவியாயிருக்கும். வருட சந்தா, உள்நாடு - ரூ 60 மட்டும்; வெளிநாடு - ரூ 200 மட்டும். உங்கள் விலாசம் மாறும்போது தயவுசெய்து உடனடியாக எங்களுக்குத் தெரியப்படுத்தவும். தயவுசெய்து பின்கோடு எண் (pincode) உட்பட உங்கள் முழு விலாசத்தையும், உங்கள் சந்தா எண்ணையும் குறிப்பிட்டு, கீழ்க்காணும் முகவரிக்குச் சந்தாவை அனுப்பவும்:

பெந்தெகொஸ்தின் பேரொலி (Penthecosthin Peroli), பெண்டிகாஸ்ட் ப்ரஸ் ட்ரஸ்ட்,
ரோஜா தெரு, இரும்புலியூர், ஸ்ரீநிவாச நகர் P.O., சென்னை - 63.

Posted at: (Patrika Channel) Egmore
Date of Publication : 3rd/4th of every month
Regd. No.TN/TBM/39(a)/2021-23
Regd. with RNI under 30319/72
Date of Posting : 4th Mar 2022
Licensed To Post W.P.P.No-TN/PMG(CCR)709/21-23

# நீண்ட பந்தய ஓட்டத்தின் கடைசிக் கட்டம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சபை, மற்றும் உலக சரித்திரம் ஆகியவற்றில் எவ்விதம் ஒரு இக்கட்டான காலகட்டத்திற்கு நாம் வந்துசேர்ந்திருக்கிறோம் என்பதை இப்பொழுது நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். உலக முழுவதிலும் மிகத் துரிதமாக உண்டாகிக்கொண்டிருக்கும் மாற்றங்கள், கடைசிக் காலத்தைக் குறித்து வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களின் முடிவான நிறைவேறுதலுக்கு நேராக நம்முடைய கிரகத்தை வேகமாகக் கொண்டுசென்று கொண்டிருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டு காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் சபையின் ஓட்டமானது ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. நீண்ட கால அந்த ஓட்டத்தின் கடைசிக் கட்டத்திற்கு நாம் வந்துசேர்ந்திருக்கிறோம். நெடுந்தூர ஓட்டப் பந்தயத்தின் முடிவை நெருங்குகையில் ஓட்டப் பந்தய வீரர்கள் வேகமாக ஓடுவதைப் போல, வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ள முடிவான, உலகளாவிய, கடைசிக் கால எழுப்புதலுக்கு நேராக நாமும் தீவிரிக்க வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. அதுவே நம்மைக் கர்த்தருடைய இரகசிய வருகைக்கு ஆயத்தப்படுத்துவதாக இருக்கும். நம்மை எதிர்கொண்டு வந்துகொண்டிருக்கும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையான சம்பவங்களை நாம் காணும்போது - அவை நன்மையானாலும் தீமையானாலும், அவற்றைச் சந்திப்பதற்கு நாம் ஆயத்தமற்றவர்களாக இருக்கிறோம் என்பதைத் தாழ்மையுடன் ஒத்துக்கொள்ள வேண்டும்.

தங்கள் தவறுகளுக்காக மனஸ்தாப்பட்டு மனந்திரும்புகிற சபைகளிலிருந்தே எழுப்புதல்கள் உருவாகியிருக்கின்றன என்பதை, எழுப்புதல்களைக் குறித்த சரித்திரத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே தேவனுடைய அன்பை நாம் அலட்சியம்பண்ணுகிறவர்களாக இருந்ததையும், அதற்கு விரோதமாக நம் இருதயத்தைக் கடினப்படுத்தியதையும் குறித்து நாம் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப வேண்டும். அப்படிப்பட்ட மனந்திரும்புதலிலிருந்து எழுப்புதல் புறப்பட்டு வருவதாக!

கடந்த வருடங்களில் நாம் உபவாசித்து ஜெபித்தது போல இவ்வருடமும் ஏப்ரல் 11 முதல் 16 வரையுள்ள நாட்கள் நமக்கு உபவாசித்து ஜெபிக்கும் வாரமாக இருக்கும். நம்முடைய சபையைச் சேர்ந்த அனைத்துத் தேவ ஊழியர்களும் விசுவாசிகளும் ஒவ்வொரு நாளும் இந்த ஜெபங்களில் கலந்துகொள்வதை ஒரு முக்கியமான விஷயமாகத் தங்கள் கருத்திற்கொண்டு அவற்றில் பங்கெடுக்கும்படி நாங்கள் அவர்களைத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்த மனந்திரும்புதலுக்கு நம்மை ஏவும்படி தேவன் தம்முடைய தயவினால் தம்முடைய ஆவியானவரின் மூலமாக நம்மோடு தொடர்ந்து போராடிக்கொண்டேயிருக்கிறார். எழுப்புதல் வேறெதாயினும் ஓரிடத்தில் திடீரென உண்டாகி, நாம் அதில் பங்குபெறுவதற்குத் தகுதியற்றவர்களாகக் கணிக்கப் பட்டுப் புறக்கணிக்கப்பட்டுப் போய் விடக் கூடாது. அது நமக்குச் சம்பவிக்கக் கூடாது. எந்தவிதத்திலும் நம்மில் அசதியானது காணப்படக் கூடாது. அதை நாம் தவிர்த்து, கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் ஜாக்கிரதையுடன் அவரைத் தேடுவோமாக.

"*அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை*" (சங். 34 : 5).

தேவன்தாமே உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

பாஸ்டர் ஆபிரகாம் மேத்யூ

இப்பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: Penthecosthin Peroli, The Pentecostal Mission, S.V. Nagar Post, Irumbuliyur, Chennai - 63. Phone: (044) 2279-0079. Email: tpmibr@gmail.com

நீங்கள் இப்பத்திரிகையின் மூலம் பயனடைந்திருப்பீர்களாயின், தயவுசெய்து இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

Published by Pastor Mayalil Thomas Thomas on behalf of Pentecost Press Trust, Roja Street, S.V. Nagar Post, Irumbuliyur, Chennai - 63 & Printed by him at Pentecost Press Trust, Roja St., S.V. Nagar Post, Irumbuliyur, Chennai - 63. EDITOR : Pastor D. John.
Annual Subscription Rs.60/-